## அத்தியாயம் 4

## தோட்டக்கலைத் துறை

தமிழகம் ஏழுவிதமான தட்பவெப்ப மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, பல்வேறுபட்ட மண்வகைகளைப் பெற்றுள்ளதால் பல்வகையான பழங்கள், காய்கறிகள், சுவைதானிய பயிர்கள், மலர்கள், மணமூட்டும் பயிர்கள் மற்றும் மூலிகைகள் வளருவதற்கு உகந்த சூழ்நிலையைப் பெற்றுள்ளது.

**10.96** இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. மொத்தம் **192.28** இலட்சம் மெட்ரிக் டன் தோட்டக்கலை விளைபொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு வேளாண் வணிகம், தோட்டக்கலை உற்பத்தி மூலம் பெறப்படுகின்றது. வேளாண்மையில் தோட்டக்கலை துரித வளர்ச்சிகண்டு வருகின்றது. இதன் மூலம் நமது உணவு பழக்கத்தில் தானியங்களின் பங்களிப்பு குறைந்து காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு அதிகரித்திருப்பதை கண்கூடாகக் காணலாம்.

தோட்டக்கலை விளைபொருட்களில், குறிப்பாக பதப்படுத்தப் பட்ட காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றிற்கான சந்தை வாய்ப்புக்கள் மற்றும் வணிக மலர்களுக்கான சந்தைகள் அதிகரித்திருப்பதிலிருந்து தோட்டக்கலை வளர்ச்சி மேலும் பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, வேளாண்மை வளர்ச்சியிலும் அதன் மூலம் நாட்டின் பொருளா தார வளர்ச்சியிலும் தோட்டக்கலை பெரும்பங்கு ஆற்றுகின்றது.

தோட்டக்கலை பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள் விளை பொருளின் தரம் மற்றும் உற்பத்தியை உயர்த்துவதாக உள்ளதால் விவசாயிகள் நல்ல வருமானம் பெறுகின்றனர். எனவே, இத்தொழில் நுட்பம் இதர விவசாயிகளையும் கவர்ந்திழுக்கக் கூடியதாக உள்ளது.

**2009–10** ஆம் நிதி ஆண்டிற்கான திட்டத்தின் முக்கிய கோட்பாடுகள்

I. நுண்ணீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடுதல் உள்ளிட்ட உயர்தொழில்நுட்பத் தோட்டக்கலை முறைகள் மேம்படுத்தப்படும்.

II. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை / ஒருங்கிணைந்த உர மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

III. தோட்டக்கலை சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

IV. தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படும்.

V. ஏற்றுமதிக் கண்ணோட்டத்துடன் இயற்கை பண்ணையம் மேம்படுத்தப்படும்.

VI. தனியார் மற்றும் அரசு கூட்டுமுறைப் பங்களிப்பு ஊக்குவிக்கப்படும்.

VII. ஒப்பந்த மற்றும் கூட்டாண்மைப் பண்ணையம் மேம்படுத்தப்படும்.

VIII. சுற்றுலாவுடன் கூடிய பயிற்சியின் மூலம் தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும்.

IX. விரிவாக்க அலுவலர்களுக்கு அதிக திறன் கொண்ட பயிற்சியின் மூலம் மனிதவளம் மேம்படுத்தப்படும்.

X. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ் நாட்டில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் விவரம்

**(பரப்பு : இலட்சம் - எக்டேரில், உற்பத்தி : இலட்சம் மெட்ரிக் டன்னில், உற்பத்தித் திறன் : மெட்ரிக் டன் / எக்டேர்.)**

| வ. எண். | பயிர் வகை | 2000–2001 | | | 2007–2008 | | | 2008–2009 (தற்காலிகம்) | | | 2009–2010 மதிப்பிடப்பட்டது) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | உற்பத்தி | உற்பத்தி திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தி திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தி திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தி திறன் |
| 1 | பழங்கள் | 2.23 | 40.06 | 17.96 | 2.8 | 67.78 | 24.21 | 3.05 | 73.88 | 24.22 | 3.32 | 80.53 | 24.26 |
| 2 | காய்கறிகள் | 2.2 | 59.39 | 26.99 | 2.39 | 76.44 | 31.98 | 2.6 | 83.32 | 32.05 | 2.83 | 90.82 | 32.09 |
| 3 | நறுமண பயிர்கள் | 1.68 | 6.62 | 3.94 | 1.4 | 7.39 | 5.28 | 1.53 | 8.05 | 5.29 | 1.67 | 8.77 | 5.3 |
| 4 | மலைத் தோட்டப் பயிர்கள் | 2.2 | 7.73 | 3.51 | 2.31 | 7.98 | 3.45 | 2.52 | 8.07 | 3.46 | 2.75 | 9.48 | 3.47 |
| 5 | மலர்கள் | 0.19 | 1.45 | 7.75 | 0.25 | 2.09 | 8.36 | 0.27 | 2.28 | 8.44 | 0.29 | 2.49 | 8.59 |
| 6 | மூலிகைப் பயிர் | 0.01 | 0.02 | 0.02 | 0.08 | 0.16 | 2 | 0.09 | 0.17 | 2.01 | 0.1 | 0.18 | 2.02 |
| மொத்தம் | | 8.51 | 115.27 | 13.55 | 9.23 | 161.84 | 17.53 | 10.06 | 175.77 | 17.47 | 10.96 | 192.28 | 17.55 |

**மாநிலத் திட்டங்கள்**

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டம் தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர இதர **31** மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தரமான நடவுச் செடிகள், வீரிய ஒட்டுக் காய்கறி விதைகள் **50** சத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. **2008–09** ஆம் நிதியாண்டில் ரூ.**266.456** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் **2009–10** ஆம் நிதியாண்டில் ரூ.**312.25** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் **25000** எக்டர் பரப்பளவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள்**

புதுக்கோட்டை மாவட்டம் **குடுமியான்மலை**, திருவள்ளூர் மாவட்டம் **மாதவரம்**, கிருஷ்ணகிரி மாவட்டம் **தளி** மற்றும் **நீலகிரி மாவட்ட விவசாயிகள் பயிற்சி மையம்** ஆகியவற்றில் விவசாயி களுக்குப் பயிற்சியளிப்பதோடல்லாமல், களப்பணியாளர் களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. **2008–09** ஆம் நிதி ஆண்டில் **7.61** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கும், களப்பணியாளர் களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. **2009–10** ஆம் நிதி ஆண்டில் **3000** விவசாயிகளுக்கும், களப்பணியாளர்களுக்கும் ரூ.**8** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணா மலை , வேலூர், திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பழங்குடி விவசாயிகளுக்கு **75** சதவீத மானியத்தில் தரமான மா, வாசனைதிரவிய பயிர்களான, மிளகு மற்றும் தோட்டப் பயிர்களான காபி ஆகியவற்றின் நடவுச் செடிகள் மற்றும் **90** சத மானியத்தில் காய்கறி விதைகள் விநியோகிக்கப்படுகிறது. உயர் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்க சுற்றுலா மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆயில் இன்ஜின் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகள் **75** சத மானியத்திலும், சொட்டுநீர் பாசனம் **90** சத மானியத்திலும் பழங்குடி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. **2008–09** ஆம் நிதியாண்டில் ரூ.**40.005**

இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் **2009–10** ஆம் நிதியாண்டிலும் ரூ.**40.00** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் திண்டுக்கல், விருதுநகர், கோயம்புத்தூர், ஈரோடு, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படுகிறது. **2008–09** ஆம் நிதியாண்டில் ரூ.**58.00** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. **2009–10** ஆம் நிதியாண்டில் ரூ.**50** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் பழங்களின் தரமான நடவுச் செடிகள், உயர் விளைச்சல் காய்கறி விதைகள், நறுமணப்பயிர்களின் நடவுச் செடிகள், பண்ணைக் கருவிகளான தெளிப்பான் மற்றும் ஆயில் இன்ஜின் **25** சத மானியத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது..

**2008–09** ஆம் நிதியாண்டில் ரூ.**88.25** இலட்சம் செலவில் ஆயில் என்ஜின்கள், வேளாண் கருவிகள் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டம் **2009–10** ஆம் நிதியாண்டில் ரூ.**182** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் சென்னை நகர் வாழ் மக்களுக்கு அலங்கார செடிகள், பழ செடிகள், உரம், விதைகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகிக்கப்படுகிறது. அத்துடன் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. **2008–09** ஆம் நிதியாண்டில் ரூ.**3.50** இலட்சம் நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் **1410** பயனாளிகள் பயன் பெற்றனர். **2009–10** ம் நிதி ஆண்டில் இத்திட்டம் ரூ.**6.00** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**

பெருவாரியான தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்படும் மகசூல் இடைவெளியை குறைக்கும் பொருட்டு ஒருமுகப்படுத்தப்பட்ட செயல்பாடுகள் மூலம் விவசாயிகளின் வருவாயை பெருக்கவும், அதன் மூலம் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் மதிப்பிடக்கூடிய அளவில் மிகப் பெரிய மாறுதலை கொண்டுவரும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 9 மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் 450 – 500 எக்டர் தொகுப்பு நிலப்பரப்பிலும், 19 மாவட்டங்களில் 90 – 100 எக்டர் தொகுப்பு நிலப்பரப்பிலும் 50 சத மானியத்தில் செயல்படுத்தப்பட்டது. 2008–09ம் ஆண்டில் மொத்தம் ரூ.2665.72 இலட்சம் நிதியில் 6100 எக்டர் பரப்பில் செயலாக்கப்பட்டது. மண் நலப்பாதுகாப்பு, நுண்ணூட்டம் அளித்தல், அறிவியல்சார் சாகுபடி முறைகளை பயன்படுத்துதல், உயர் விளைச்சல் தரக்கூடிய இரகங்களை நுண்ணீர் பாசனத்தினைக் கொண்டு பயிரிடுதல் ஆகியவற்றினால் விவசாயிகள் இதுவரையில் பெறாத அளவில் அதிக விளைச்சலைப் பெற்றனர். எனவே, அறிவியல் சார் வேளாண் தொழில்நுட்பங்கள், விவசாயத்தினை இலாபகரமான தாகவும், அதிக வருவாயைத் தருவதுடன், விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தக்கூடியதாகவும் உள்ளது. 2009–10ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.2400 இலட்சம் மதிப்பீட்டில் 5000 எக்டர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்படும்.

**இலக்கு மற்றும் சாதனை**

மாநில அரசுத் திட்டங்கள் 2008–09 ஆம் நிதிஆண்டில் நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் 2009–10 ஆம் நிதிஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

**நிதி : ரூபாய் இலட்சங்களில்**

| வ. எண் | திட்டங்களின் பெயர் | அலகு | 2008–09 | | | | 2009–10 முன்மொழியப் பட்டது | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | இலக்கு |
| 1. | ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் | எக். | 21343.33 | 22666.83 | 266.160 | 266.456 | 25000 | 312.25 |
| 2 | தோட்டக்கலை பயிற்சி மையம் | எண்கள் | 2600 | 2600 | 7.610 | 7.610 | 3000 | 8.00 |
| 3 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித்திட்டம் | எக். | 904.54 | 904.54 | 40.000 | 40.005 | 904.54 | 40.00 |
| 4 | மேற்குத் தொடர்ச்சிமலை வளர்ச்சித்திட்டம் | எக். | 75.00 | 75.00 | 58.000 | 58.00 | 75.00 | 50.00 |
| 5 | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | எக். | 42600 | 42600 | 88.250 | 58.250 | 3000 | 182.00 |
| 6 | தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் | | 6100 | 5649.000 | 2665.720 | 2395.710 | 5000.00 | 2400.00 |
| 7 | பகுதி–2 திட்டங்கள் | எண்கள் | - | - | 0.020 | - | 1 | 100.00 |
| 8 | நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம் | எக். | 200 | 200 | 3.500 | 3.50 | 100 | 6.00 |
| | மொத்தம் | | | | 3129.26 | 2829.531 | | 3098.250 |